## இந்திய மொழிகள் - ஒரு பார்வை

2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் பெருவாரியாக பேசப்படும் மொழி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மொழி | எழுதுவோர்/ பேசுவோர் |
|---|---|
| ஹிந்தி | 551 லட்சம் |
| ஆங்கிலம் | 125 |
| பெங்காலி | 91 |
| தெலுங்கு | 85 |
| மராத்தி | 84 |
| தமிழ் | 66 |
| உருது | 59 |
| குஜராத்தி | 51 |
| கன்னடம் | 51 |
| ஒரியா | 37 |
| மலையாளம் | 34 |
| பஞ்சாபி | 31 |
| அசாமி | 18 |

இவற்றில், ஆங்கிலத்தைத் தவிர்த்து, மற்றவை இந்திய மொழிகள்.

இந்தப் புள்ளி விவரங்களை கூர்ந்து ஆராய்ந்தால், சம்ஸ்க்ருத மொழியை வேராகக் (Root) கொண்ட ஹிந்தி, பெங்காலி, மராத்தி, குஜராத்தி போன்ற மொழிகளை, இந்தியாவில் ஏறக் குறைய 70 சதவிகித மக்கள் அறிந்துள்ளனர். அவ்வாறே, கிரந்த எழுத்துக்கள் பலவற்றுடன் ஒற்றுமை உள்ள தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகளை, ஏறக் குறைய 15 சதவிகித மக்கள் அறிந்துள்ளனர்.

ஒரு மொழியில் எவ்வளவு சொற்கள் உள்ளது என்று பட்டியலிடுவது மிகவும் கடினமானது. உதாரணத்திற்கு ஆங்கிலத்தில், பிரபலமான அகராதி Oxford English Dictionary யில், அடிப்படைச் சொற்கள் 2,50,000 (child, write, short, known போன்றவை) எனவும், அந்தச் சொற்களை அடிப்படையாகக் கொண்டப் பிறச் சொற்கள் 5,50,000 (children, wrote, shorter, unknown போன்றவை) எனவும் கணக்கிட்டுள்ளனர். இவற்றில் கலை, அறிவியல், தொழில் சார்புடைய சொற்கள் சேர்க்கப்படவில்லை.

நடைமுறையில், ஆங்கிலத்தில் , ஒருவரால் 500 முதல் 1000 சொற்களைப் பயன்படுத்தி, எளிய சொற்றொடர்களை அமைத்து, சரளமாக பேச முடியும் என்பது உண்மை. இன்றைய அன்றாட வாழ்கையில், ஆங்கிலம் படிக்காதவர்கள் கூட, ஏறக்குறைய, 100 முதல் 200 சொற்களைப் பயன்படுத்துவதை நாம் பார்க்கின்றோம்.

ஆகவே, ஒரு மொழியில் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ள, மற்றும் அன்றாட வாழ்க்கையில் உபயோகப்படுத்தும் சொற்கள்/ சொற்றொடர்களை சில நாட்கள், மேற்கொள்ளும் பயிற்சியில் பெற முடியும்.

நமது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு வித்திட்ட, திருவள்ளுவர், கம்பர், அவ்வையார் போன்ற பண்டைய கால புலவர்கள் முதல் இன்றையக் கால தமிழ் அறிஞர்கள், பாரதியார், மு.மு இஸ்மாயில், ம பொ சிவஞானம், சாலமன் பாப்பையா போன்றவர்கள் வரை, பலர், சம்ஸ்க்ருத மொழியில் புலமை பெற்றவர்களாகவோ அல்லது அதன் பெருமைகளை உணர்ந்தவர்களாக உள்ளனர். வேற்று மொழிப் பயிற்சி, ஒருவரது தாய் மொழியின் மேலுள்ள ஈடுபாட்டை குலைத்துவிடும் என்ற பரவலான ஒரு கருத்தை அவர்கள் ஆதரிக்கவில்லை. அதற்கு மாறாக , பன்மொழிப் பயிற்சியானது, அவர்களின் அறிவையும், வாழ்கையையும் மேம்படுத்தும் என்றே கருதினர்.

தமிழ் மொழியுடன், ஹிந்தி, பெங்காலி, தெலுங்கு,சம்ஸ்க்ருதம், ஆங்கிலம் ,ப்ரெஞ்ச் போன்ற பிற மொழிகளிலும் புலமைப் பெற்ற பாரதியார்

**“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்”**

என்று தமிழ் மொழியின் சிறப்பைப் பறைசாற்றியவர். அவரின், இந்தப் பாடல் வரிகளை நினைவு கூர்ந்து, நம்முடைய பன்மொழித் திறமைகளை வளர்த்துக் கொள்ள முற்படுவோம்.

<u>பின் குறிப்பு :</u> இங்கு, 10 மொழிகளின் எழுத்துக்கள், எழுத்து முறைகளை அடிப்படையாகக் கொண்டு, 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு அறிமுகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

- தமிழ் மொழி எழுத்துக்கள்
- தேவநாகரி எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்ட சம்ஸ்க்ருதம், ஹிந்தி, பெங்காலி, மராத்தி, குஜராத்தி மற்றும் அசாமி மொழி எழுத்துக்கள்
- கிரந்த எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்ட தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் மொழி எழுத்துக்கள்

தமிழில் ஆய்த எழுத்து, சம்ஸ்க்ருதத்தில் அம்,அஹ,க்ஷ போன்ற சில எழுத்துக்களும், உயிர்மெய்யெழுத்துகளும் கொடுக்கப்படவில்லை.

இந்தப் பகுதியை கூர்ந்து நோக்குகையில், தேவநாகரி மற்றும் கிரந்த எழுத்து முறைகளில் உள்ள, ஏறக்குறைய 50 எழுத்துக்களை எழுத மற்றும் படிக்க பழகிவிட்டால், அந்த எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்ட, மொழியின் பிற எழுத்துக்களை (உயிர்மெய்யெழுத்து, கூட்டெழுத்து போன்றவற்றை) சுலபமாகக் கற்க முடியும்.

| Tamil | Sanskrit | Hindi | Marati | Bengali | Gujarati | Assamese | | Grantha | Telugu | Kannada | Malayalam |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | अ | अ | अ | অ | અ | অ | | 𑌅 | అ | ಅ | അ |
| ஆ | आ | आ | आ | আ | આ | আ | | 𑌆 | ఆ | ಆ | ആ |
| இ | इ | इ | इ | ই | ઇ | ই | | 𑌇 | ఇ | ಇ | ഇ |
| ஈ | ई | ई | ई | ঈ | ઈ | ঈ | | 𑌈 | ఈ | ಈ | ഈ |
| உ | उ | उ | उ | উ | ઉ | উ | | 𑌉 | ఉ | ಉ | ഉ |
| ஊ | ऊ | ऊ | ऊ | ঊ | ઊ | ঊ | | 𑌊 | ఊ | ಊ | ഊ |
| எ | | | | এ | | | | | ఎ | ಎ | എ |
| ஏ | ए | ए | ए | | એ | এ | | 𑌏 | ఏ | ಏ | ഏ |
| ஐ | ऐ | ऐ | ऐ | ঐ | ઐ | ঐ | | 𑌐 | ఐ | ಐ | ഐ |
| ஒ | ऑ | ऑ | ऑ | অ | | | | 𑌓 | ఒ | ಒ | ഒ |
| ஓ | | | | ও | ઓ | ও | | | ఓ | ಓ | ഓ |
| ஔ | औ | औ | औ | ঔ | ઔ | ঔ | | 𑌔 | ఔ | ಔ | ഔ |
| | | | | | | | | | | | |
| | ऋ | ऋ | ऋ | ঋ | ઋ | ঋ | | 𑌋 | ఋ | ಋ | ഋ |
| | ॠ | ॠ | ॠ | ৠ | ૠ | ৠ | | 𑍠 | ౠ | ೠ | ൠ |
| | ऌ | ऌ | ऌ | ঌ | ઌ | ঌ | | 𑌌 | ఌ | ಌ | ഌ |
| | ॡ | ॡ | ॡ | ৡ | ૡ | ৡ | | 𑍡 | ౡ | ೡ | ൡ |
| | | | | | | | | | | | |
| க | क | क | क | ক | ક | ক | | 𑌕 | క | ಕ | ക |
| | ख | ख | ख | খ | ખ | খ | | 𑌖 | ఖ | ಖ | ഖ |
| | ग | ग | ग | গ | ગ | গ | | 𑌗 | గ | ಗ | ഗ |
| | घ | घ | घ | ঘ | ઘ | ঘ | | 𑌘 | ఘ | ಘ | ഘ |
| ங | ङ | ङ | ङ | ঙ | ઙ | ঙ | | 𑌙 | ఙ | ಙ | ങ |

| Tamil | Sanskrit | Hindi | Marati | Bengali | Gujarati | Assamese | | Grantha | Telugu | Kannada | Malayalam |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச | च | च | च | চ | ચ | চ | | 𑌚 | చ | ಚ | ച |
| | छ | छ | छ | ছ | છ | ছ | | 𑌛 | ఛ | ಛ | ഛ |
| ஜ* | ज | ज | ज | জ | જ | জ | | 𑌜 | జ | ಜ | ജ |
| | झ | झ | झ | ঝ | ઝ | ঝ | | 𑌝 | ఝ | ಝ | ഝ |
| ஞ | ञ | ञ | ञ | ঞ | ઞ | ঞ | | 𑌞 | ఞ | ಞ | ഞ |
| | | | | | | | | | | | |
| ட | ट | ट | ट | ট | ટ | ট | | 𑌟 | ట | ಟ | ട |
| | ठ | ठ | ठ | ঠ | ઠ | ঠ | | 𑌠 | ఠ | ಠ | ഠ |
| | ड | ड | ड | ড | ડ | ড | | 𑌡 | డ | ಡ | ഡ |
| | ढ | ढ | ढ | ঢ | ઢ | ঢ | | 𑌢 | ఢ | ಢ | ഢ |
| ண | ण | ण | ण | ণ | ણ | ণ | | 𑌣 | ణ | ಣ | ണ |
| | | | | | | | | | | | |
| த | त | त | त | ত | ત | ত | | 𑌤 | త | ತ | ത |
| | थ | थ | थ | থ | થ | থ | | 𑌥 | థ | ಥ | ഥ |
| | द | द | द | দ | દ | দ | | 𑌦 | ద | ದ | ദ |
| | ध | ध | ध | ধ | ધ | ধ | | 𑌧 | ధ | ಧ | ധ |
| ந | न | न | न | ন | ન | ন | | 𑌨 | న | ನ | ന |
| ன | ऩ | ऩ | ऩ | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| ப | प | प | प | প | પ | প | | 𑌪 | ప | ಪ | പ |
| | फ | फ | फ | ফ | ફ | ফ | | 𑌫 | ఫ | ಫ | ഫ |
| | ब | ब | ब | ব | બ | ব | | 𑌬 | బ | ಬ | ബ |
| | भ | भ | भ | ভ | ભ | ভ | | 𑌭 | భ | ಭ | ഭ |
| ம | म | म | म | ম | મ | ম | | 𑌮 | మ | ಮ | മ |
| | | | | | | | | | | | |

| Tamil | Sanskrit | Hindi | Marati | Bengali | Gujarati | Assamese | | Grantha | Telugu | Kannada | Malayalam |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ய | य | य | य | য | ય | য | | ய | య | ಯ | യ |
| ர | र | र | र | র | ર | ৰ | | ர | ర | ರ | ര |
| ற | ऱ | ऱ | ऱ | | | | | | ఱ | ಱ | റ |
| ல | ल | ल | ल | ল | લ | ল | | ல | ల | ಲ | ല |
| ள | ळ | ळ | ळ | | ળ | | | ள | ళ | ಳ | ള |
| ழ | ऴ | ऴ | ऴ | | | | | | | ೞ | ഴ |
| வ | व | व | व | | વ | ৱ | | வ | వ | ವ | വ |
| | | | | | | | | | | | |
| ஶ | श | श | श | শ | શ | শ | | ஶ | శ | ಶ | ശ |
| ஷ | ष | ष | ष | ষ | ષ | ষ | | ஷ | ష | ಷ | ഷ |
| ஸ | स | स | स | স | સ | স | | ஸ | స | ಸ | സ |
| ஹ | ह | ह | ह | হ | હ | হ | | ஹ | హ | ಹ | ഹ |
| | | | | | | | | | | | |